


தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தென்காசி சட்டமன்றத் தொகுதி (BLA2) பாக முகவர்கள் (BDA) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆலோசனைக் கூட்டம் ஜெகநாத் அரங்கில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.உடன் கழக சட்டத்துறை இணை செயலாளர் ரவிச்சந்திரன், துணை செயலாளர் ராஜா முகமது,தொகுதி பார்வையாளர் கலை கதிரவன்,நகர செயலாளர் சாதிர், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### கழக நிர்வாகிகள் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் விதமாக,

# வாக்குச்சாவடி வாரியாக வாக்காளர்களைச் சந்தித்து அரசின் திட்டங்களை எடுத்துரைப்பீர்!

## முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வலியுறுத்தல்!



கோவை, நவ. 5–

கோவை மாவட்டத்தில் கழக நிர்வாகிகள் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் விதமாக, வாக்குச்சாவடி வாரியாக வாக்காளர்களைச் சந்தித்து அரசின் திட்டங்களை எடுத்துரைத்து அதிக வாக்குகள் பெற முனைப்புடன் உள்ளனர் என்று கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது : கழகத்தினுடைய மாநில நிர்வாகிகள் தொடங்கி அனைத்து நிலைகளிலும் பணியாற்றி இருக்கக்கூடிய கழக நிர்வாகிகள், கழகத்தினுடைய அடிப்படை உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஒரு நாள் தேர்ந்தெடுத்து அந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட அனைத்து வாக்காளர்களையும் இல்லம் தேடி நேரிலே சென்று சந்தித்து அரசினுடைய திட்டங்களை எடுத்துச் சொல்லி அனைத்து வாக்குச்சாவடிகளில் வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் கடந்த தேர்தலை விட அதிகமான வாக்குகளை பெறுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவருடைய கட்டளை 234 சட்டமன்றத் தொகுதியில் குறிப்பாக 68,000க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளிலும் இந்த பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்று உத்தரவுகளை வழங்கி இருக்கின்றார்கள். கழகத் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின் படி கோவை மாவட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகளிலும் 311 வாக்குச்சாவடிகளிலும் கழகத்தினுடைய பணிகளை கவனமாக முன்னெடுக்கும் வகையில் இந்த ஆலோசனை கூட்டங்கள் கோவை மாவட்டத்தில் நடைபெறுகிறது. வரக்கூடிய சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வதற்கு திராவிட முன்னேற்ற கழகம் தயாராக இருக்கிறது. வாக்காளர் பட்டியலுடைய திருத்தங்களை (SIR) பொறுத்தவரைக்கும் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் அதற்கான எதிர்ப்புகளை பதிவு செய்திருக்கிறார்கள். பீகாரில் என்ன நடந்துச்சுன்னு நம்ம எல்லாருக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும் அது போன்ற ஒரு சூழல் தமிழ்நாட்டில் வந்து விடக்கூடாது, நிச்சயமாக வருவதற்கான அவர்கள் எடுக்கக்கூடிய அந்த முயற்சிகளை ஒருபோதும் திராவிட முன்னேற்ற கழகமும், நம்முடைய கழகத் தலைவரும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனையின் படி அந்த (SIR) வாக்காளர் குறித்து திராவிட முன்னேற்ற கழகம் மிக கவனமாக கையாளும், கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து வழங்கக்கூடிய ஆலோசனைகளை ஏற்று ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் சார்பிலும் அவர்களின் பணிகளை அன்னன்னைக்கு முடித்து விட வேண்டும்.

**கேள்வி** : ஓபிஎஸ், டிடிவி தினகரன், செங்கோட்டையன் மூவரும் எங்களுடைய ஒற்றை இலக்கு எடப்பாடி, முதல்ல இந்த துரோகத்தை வீழ்த்தணும்னு சொல்லி இருக்காங்க இது எப்படி பார்க்கிறீங்க?

**பதில்** : ஒவ்வொரு கட்சியும், ஒவ்வொரு சூழல்ல இருக்காங்க, இது இன்னொரு கட்சியினுடைய உட்கட்சி விவகாரம் அது சம்பந்தமா கருத்து சொல்வது சரியாக இருக்காது. திராவிட முன்னேற்ற கழகத்தை பொறுத்தவரைக்கும் கழகத் தலைவர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு இயக்கத்தை வலுப்படுத்த, கழக நிர்வாகிகளை தயார்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கோவை மாவட்டம் சட்டமன்றத் தேர்தலை சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கிறது. அதற்கான பணிகளை நாங்கள் முன்னெடுத்து இருக்கின்றோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோவைக்கு வருகை தருகின்ற பொழுது தொடர்ந்து அரசினுடைய திட்டங்களை தொடங்கி வைப்பதோடு முடிவற்ற பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்துள்ளார். புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளையும் அதற்கான நிதிகளையும் வழங்கி வருகின்றார்கள்.

**கேள்வி:** தங்க நகை செய்யக்கூடியவங்க அவங்களுடைய கோரிக்கை அந்த பூங்கா அமைப்பதற்கு எத்தனை ஆண்டு கால கோரிக்கை வைத்தனர்?

**பதில்:** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு பத்துக்கு பத்து ரூம்ல உட்கார்ந்து அவங்க தொழில் செய்த சூழ்நிலையை மாற்றி அவர்கள் பகுதிக்கு நேரில் சென்று அவர்களை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டு அதற்கான அறிவிப்புகளை வெளியிட்டு நிதிகளை ஒதுக்கி கொடுத்து அந்த கட்டிடம் (பூங்கா) பணிகளுக்கான அடிக்கல் நாட்டி இருக்கின்றார்கள். அந்த பணிகள் மிக விரைவாக முடித்து அவர்களுடைய பயன்பாட்டிற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்படும்.

அதேபோல தான் அவிநாசி சாலை மேம்பாலம் கடந்த கால ஆட்சியில் அது தொடங்கப்பட்டிருந்தாலும் கூட வெறும் 80 கோடி ரூபாய் தான் செலவே பண்ணி இருந்தாங்க, உங்களுக்கு எல்லாம் தெரியும் அதுலே எத்தனை வழக்குகள் நீதிமன்றத்துல நிலுவையில் இருந்துச்சு என்று, அந்த வழக்குகள் எல்லாம் முடிக்கப்பட்டு ஏறத்தாழ 1,800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்த பாலப்பணிகள் முடிந்து பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதேபோல பலாப்பணிக்கு நாங்க ரூபாய்1800 கோடி செலவு செய்திருக்கிறோம், அவங்க ரூபாய் 80 கோடி செலவு பண்ணிருக்காங்க, ஆனால் அதிமுக முன்னாள் அமைச்சர் சொல்லிருக்காங்க 50% பணிகள் நாங்க முடிச்சிட்டோம் என்று, ஆனா இவங்க வந்து எந்த பணிகளும் அப்ப வந்து அவங்க செய்யல, தாமதப்படுத்தினாங்க, ரூபாய் 1800 கோடி பாலத்துல ரூபாய் 80 கோடிங்கிறது 50% தான் இது வந்து நாங்க வாய் வழியா சொல்ற செய்தி அல்ல, எந்த வருடம் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்பது அதுக்கான பில் கொடுத்திருக்காங்கல்ல, அந்த பாலம் கட்டுனவங்களுக்கான நிதியை கொடுத்திருக்காங்கல்ல எந்த ஆண்டு எவ்வளவு நிதி விடுவிக்கப்பட்டது என்பதை அவங்ககிட்ட கேளுங்க, 50% அவங்க சொன்னா தலைவரா இருந்தாலும் சரி, அவரோடு கட்சி சார்ந்தவர்களா இருந்தாலும் சரி ஆண்டு வாரியா சொல்ல சொல்லுங்க, 2021 ஆட்சி முடியும் போது அந்த பாலத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு, 2022 ஆம் ஆண்டு செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு, 2023இல் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு, 2021ல் எத்தனை வழக்குகள் இருந்தது, அதற்கு பிறகு எத்தனை வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன இதையெல்லாம் அவங்ககிட்ட கேள்வியா கேளுங்க, வெறும் ரூபாய் 80 கோடி 50% போற வழியில சொல்லக்கூடிய செய்தி அல்ல சொல்லக்கூடியவங்க 2021 ஆட்சி முடிகின்ற பொழுது நாங்கள் இந்த பாலத்துக்கு இவ்வளவு தொகை செலவழித்தோம் என்று அவரிடத்திலே ஆதாரத்தோடு சொல்ல சொல்லுங்க நான் பதில் சொல்றேன் என்று கூறினார். அதேபோல நூலக கட்டிடம் கட்டும் பணி, செம்மொழி பூங்கா அமைக்கும் பணி, சாலை வசதிகள் அமைக்கும் பணிகள் என இப்படி தொடர்ச்சியாக கோவை மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கு தொடர்ந்து நிதிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள். பல்வேறு திட்டங்களை தந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே கோவை மாவட்டத்தை பொறுத்தவரை வரக்கூடிய 2026 சட்டமன்றத் தேர்தல் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய கோட்டையாக மாற்ற கழக நிர்வாகிகள் தயாராகிவிடனர். எங்களுடைய செயல்பாடு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அதிகமான வாக்குகளை பெற வேண்டும். தமிழ்நாட்டு மக்களுக்கு முதலமைச்சர் வழங்கியுள்ள திட்டங்களை கொண்டு சென்று சேர்க்க வேண்டும், அவருடைய கோரிக்கைகளை கேட்டு பெற்று அதை செயல்படுத்திட வேண்டும், நிறைவேற்றிட வேண்டும் அது தான் ஒற்றை இலக்காக கொண்டு திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய மாநில நிர்வாகிகள் தொடங்கி மாவட்ட நிர்வாகிகள் இருந்து கிளைக் கழகம், வட்டக் கழகம் வரை அந்த பணிகளை நாங்கள் முன்னெடுத்து செயல்படுத்துகிறோம். மக்களோடு மக்களாக இரண்டற கலந்து மக்களுக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்தக்கூடிய ஒரு மகத்தான பணியில் எங்களுடைய திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய நிர்வாகிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அந்த பணிகளை முன்னெடுத்து இருக்கின்றோம்.

இன்னொரு கட்சியை பற்றி, இன்னொரு கட்சியினுடைய நிலைகளைப் பற்றி அவங்ககிட்ட தான் நீங்க கேள்வி கேட்கணும், ஒவ்வொரு கட்சியிலும் நீங்க அந்தந்த கட்சியினுடைய நிலைப்பாடு குறித்து அந்த கட்சியினுடைய தலைவர்கள், இரண்டாம் வட்ட தலைவர்கிட்ட கேட்டீங்கன்னா அது சரியா இருக்கும். எங்க கட்சியை பத்தி எங்ககிட்ட கேளுங்க, எங்க கட்சியினுடைய செயல்பாடுகளை பத்தி எங்க கிட்ட கேளுங்க.

**கேள்வி:** கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளாக போடப்படாத சாலைகள்!

**பதில்:** கடந்த அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகளாக போடப்படாத சாலைகள், எப்பவுமே சாலையை பொறுத்த வரைக்கும் 5 வருடம் அதனுடைய ஆயுள் காலம், 5 வருடத்திற்கு முன்னாள் எந்த சாலையும் போட முடியாது, அப்ப கடந்த ஆட்சியில போட்டிருந்தா இப்ப 5 வருடத்திற்குள்ள சாலை போட வேண்டிய அவசியம் கிடையாது. கடந்த ஆட்சியில் எந்த சாலையும் போடாத சூழல்ல தான் இப்ப சாலை அமைப்பதற்காக ரூபாய் 200 கோடி சிறப்பு நிதியை முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு முன்பும் நிதிகளை கொடுத்தாங்க இப்பொழுது கூடுதலாக தேவைப்படுகின்ற நிதிகளை கொடுப்பதற்கு முதலமைச்சர்கள் தயாரா இருக்காங்க, குடிநீர் திட்ட பணிகளா இருந்தாலும், பாதாள சாக்கடை திட்டப் பணிகளா இருந்தாலும் இருக்கக்கூடிய நிலையில் நிறைவு செய்ய வேண்டும் என்று அவர்களிடத்திலே அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. விடுபட்ட சாலைகள் இப்பொழுது கணக்கெடுக்கப்படுகின்றன, கோவை மாநகராட்சியை பொறுத்தவரை எந்த சாலைகள் விடுபட்டு இருக்கோ பாதாள சாக்கடை நடந்தது, குடிநீர் திட்ட பணிகள் விடுபட்ட சாலைகள் கணக்கெடுக்கப்பட்டிருக்கு அதற்கு நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் நிதிகளை கொடுப்பார்கள். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அந்த சாலைகளும் முழுமையாக அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### அமைச்சர் எ.வ. வேலு பங்கேற்பு!

# திருப்பத்தூர் மாவட்டம்: சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி அறிக்கை!



*திருப்பத்தூர், நவ.5-*

*திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் கழகம் சார்பில் வாக்குச்சாவடிகளில் நியமிக்கப் பட்டுள்ள பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் திருப்பத்தூர் YDK மஹாலில் நாளை (6.11.2025) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில்*

*பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், வடக்கு மண்டல பொறுப்பாளர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில் தொழில்நுட்ப அணி தொகுதி OTN ஒருங்கிணைப்பாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.*

*பொருள் :*

*1.வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (SIR) குறித்து,*

*2.கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆகியோர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

### மதுரைமாநகர்மாவட்டம்

# தெற்கு வாசல் பகுதி, 53வது வட்டக்கழகப்பொறுப்பாளர்நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டம், தெற்கு வாசல் பகுதி 53வது வட்டப் பொறுப்பாளர் ஜெ.கார்த்திகேயன் அவர்களுக்குப் பதிலாக திரு.**எஸ்.அசோக்பாபு** (31/17, சப்பானி கோயில் தெரு, தெற்கு சந்து, தெற்குவெளி வீதி, மதுரை625 001) அவர்கள் 53வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 04.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த உதவி மையம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட **கழக சட்டத்துறைச் செயலாளர்** மூத்த வழக்கறிஞர் **என். ஆர். இளங்கோ எம்.பி.**, மேற்பார்வையில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கழக நிர்வாகிகள் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சந்தேகங்களை **08065420020** என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கான பதில்களை பெற்று முறையாக பணிகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| மண்டலம் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|
| தெற்கு | வழக்கறிஞர் கே.எஸ்,ரவிச்சந்திரன் | 98400 22252 |
| வடக்கு | வழக்கறிஞர் ஜெ.பச்சையப்பன் | 98402 60178 |
| மதுரை | வழக்கறிஞர் பாலாஜி | 97105 82658 |
| சென்னை | வழக்கறிஞர் நந்தகோபால் | 98841 53737 |
| டெல்டா | வழக்கறிஞர் பெ.ரகு | 94444 13889 |
| விழுப்புரம் | வழக்கறிஞர் சந்திரபோஸ் | 98413 64135 |
| கிருஷ்ணகிரி | வழக்கறிஞர் என்.மருது கணேஷ் | 98400 34950 |
| மேற்கு | வழக்கறிஞர் சசிதரன் | 99520 84065 |

**ஒருங்கிணைப்பு பணிக்கு உதவிட :**

**அழகிரி சதாசிவம்**, **(9841950707)**
(மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்)

**வே. கௌதமன்**, **(9040923535)**
(மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்)

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 04.11.2025.

**தலைமைக் கழகம்**,
தி.மு.க.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மாவட்ட வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேலும் கூட்டத்தில் ச.கந்தசாமி, ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்பட அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோவை மு. சுலைமான்

### நவம்பர் 5 (1983)



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.**

**நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.**

**கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**